செ.வெ.எண்: 63 நாள்:23.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழக அரசின் குடும்ப நலத்திட்டங்களை மருத்துவ அலுவலர்கள் சிறப்பாக செயல்படுத்த வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை இந்திய மருத்துவ சங்க அலுவலக கூட்டரங்கில் புதுக்கோட்டை மாவட்ட குடும்ப நலச் செயலகம் சார்பில் குடும்ப நலத் திட்டம், குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு பின்னர் தோல்வி மற்றும் இறப்பு தொடர்பான தர நிர்ணயம் மற்றும் காப்பீடு தொடர்பாக மாவட்ட அளவிலான அனைத்து மருத்துவ அலுவலர்களுக்கான கருத்து பட்டறை பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23-8-2016) நடைபெற்றது.

இந்த அனைத்து மருத்துவ அலுவலர்களுக்கான கருத்து பட்டறை பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு குடும்ப நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் அனைத்து மருத்துவ அலுவலர்களுக்கும் பயிற்சி வகுப்பு நடத்த உத்தரவிட்டுள்ளது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் மாவட்ட குடும்ப நலச் செயலகம் சார்பில் குடும்ப நலத் திட்டம், குடும்ப நல அறுவை சிகிச்சைக்கு பின்னர் தோல்வி மற்றும் இறப்பு தொடர்பான தர நிர்ணயம் மற்றும் காப்பீடு தொடர்பாக மாவட்ட அளவிலான அனைத்து மருத்துவ அலுவலர்களுக்கான கருத்து பட்டறை பயிற்சி வகுப்பு துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வகுப்பில் பெண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சையில் தர உறுதி மேம்பாடு, குடும்ப நல அறுவை சிகிச்சையில் பாதுகாப்பான மயக்க மருந்து தொடர்பான நெறிமுறைகள், நவீன ஆண் அறுவை சிகிச்சையில் பாதுகாப்பான நெறிமுறைகள், குடும்ப நல சேவையில் காப்பீடு திட்டங்கள், ஆவணம் மற்றும் உரிய காலத்தில் இழப்பீடு கோருதல் போன்ற பல்வேறு குடும்ப நலத் திட்டங்கள் தொடர்பாக மருத்துவ அலுவலர்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. எனவே இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டுள்ள மருத்துவ அலுவலர்கள் இப்பயிற்சியினை முறையாக கற்று பொது மக்களுக்கு தமிழக அரசின் குடும்ப நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம், ஊரக நலம் மற்றும் குடும்ப நலம் இணை இயக்குநர் (பொ) மரு.எஸ்.சையதுமொய்தின், இந்திய மருத்துவ சங்க புதுக்கோட்டை கிளை தலைவர் மரு.கரு.இராமநாதன் உள்ளிட்ட மருத்துவ அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**